Kantale Education Centre

KEC இன் 05

2024 ம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான

ஆசிரியர்

M.F. றியாஸ் மொஹமட்

அவர்களின்

வெற்றிப்பாதை

இலகு வழிகாட்டல் கருத்தரங்கு

01) வகுப்பொன்றில் உள்ள 5 மாணவர்களில் இருவரை ஆசிரியர் தெரிவுசெய்ய வேண்டியுள்ளது. ஆசிரியர் அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் தெரிவுசெய்யலாம் ?

1) 15 **2)** 10 **3)** 6

02) வகுப்பொன்றில் உள்ள 5 மாணவர்களில் மூவரை ஆசிரியர் தெரிவு செய்ய வேண்டி உள்ளது. ஆசிரியர் அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் தெரிவுசெய்யலாம் ?

1) 15 **2)** 10 **3)** 6

03) வகுப்பொன்றில் உள்ள 7 மாணவர்களில் மூவரை ஆசிரியர் தெரிவுசெய்ய வேண்டியுள்ளது. ஆசிரியர் அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் தெரிவுசெய்யலாம் ?

1) 35 **2)** 40 **3)** 45

04) வகுப்பொன்றில் உள்ள 9 மாணவர்களில் மூவரை ஆசிரியர் தெரிவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியர் அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் தெரிவுசெய்யலாம் ?

1) 27 **2)** 28 **3)** 84

05) வகுப்பொன்றில் உள்ள 10 மாணவர்களில் இருவரை ஆசிரியர் தெரிவுசெய்ய வேண்டியுள்ளது. ஆசிரியர் அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை விதங்களில் தெரிவுசெய்யலாம் ?

1) 12 **2)** 45 **3)** 40

06) பின்வரும் தகவல்களைக் கருதுக.

ரவி வகுப்பறைக்கு வரும் போது ரகுவும் இருப்பான்.
குமார் வகுப்பறைக்கு வந்தால் ரவி இருக்க மாட்டான்.
குமார் வகுப்பறைக்கு வராவிட்டால் இக்பால் வகுப்பறைக்கு வருவான்.

இதற்கமைய ஒரே நேரத்தில் சந்திக்கும் மூன்று நண்பர்களும் யாவர் ?

1) ரவி, ரகு, இக்பால் **2)** குமார், இக்பால், ரவி **3)** ரவி, குமார், இக்பால்

07) றியாஸ் புத்தகம் ஒன்றை வாசிக்கும் போது அப்புத்தகத்தின் 48, 49, 52, 53, 69, 70 ஆகிய பக்கங்கள் கிழிந்து காணப்பட்டன. அப்புத்தகத்தில் கிழிக்கப்பட்டுள்ள மொத்தத் தாள்களின் எண்ணிக்கை எத்தனை ?

1) 6 **2)** 5 **3)** 3

08) நான் புத்தகமொன்றில் 84 பக்கங்களை வாசித்தேன். அதன்படி, நான் வாசித்த பக்கங்களின் இலக்கங்கள்.

1) இலக்கம் 12 இலிருந்து இலக்கம் 96 வரை **2)** பக்கம் 11 இலிருந்து இலக்கம் 94 வரை
3) பக்கம் 11 இலிருந்து இலக்கம் 93 வரை

LEARN EASY
KNOWLEDGE IS POWER

அழையுங்கள் :
76667-4945



zoom

எப்பாத்திலிருந்தும்
இணையலாம்



தரம் 1
தொடக்கம்

தரம் 5
வரை

- பாடத் தெரிவுகள் செய்ய முடியாது.
- சகல பாடங்களுக்குமான மாதக்கட்டணம்
- அனைத்து பாடங்களுக்குமான recording வழங்கப்படும்.

நுண்ணறிவு
வினாத்தாள்
(பகுதி 1, பகுதி 2)

Spoken English

தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்

09) மந்திரக்கூடை ஒன்றில் உள்ள பூக்கள் ஒவ்வொரு நிமிடத்திலும் இரட்டிப்பாகும். இந்த நியதிக்கு அமைவாக 60ஆவது நிமிடத்தில் குறித்த கூடை முழுவதும் நிரம்பியது. அதன்படி, இக்கூடையில் $\frac{1}{4}$ பங்கு எத்தனையாவது நிமிடத்தில் நிரம்பியிருக்கும் ?

1) 15 ஆவது நிமிடத்தில் **2)** 30 ஆவது நிமிடத்தில் **3)** 58 ஆவது நிமிடத்தில்

10) இலக்கக்கடிகாரம் ஒன்று 4ஆம் இலக்கத்தைக் காட்ட 4 சமதுண்டுகளையும் 5ஆம் இலக்கத்தைக் காட்ட 5 சமதுண்டுகளையும் 6ஆம் இலக்கத்தைக் காட்ட 6 சமதுண்டுகளையும் பயன்படுத்தியது. அதன்படி, 3 ஆம் இலக்கத்தைக் காட்ட எத்தனை சமதுண்டுகளைப் பயன்படுத்தியிருக்கும்.

1) 3 சமதுண்டுகளை **2)** 4 சமதுண்டுகளை **3)** 5 சமதுண்டுகளை

11) ஓர் உண்டியலில் ரூ. 2, ரூ. 5, ரூ. 10 ஆகிய நாணயக் குற்றிகள் மாத்திரம் சில உள்ளன. அவற்றில் 11ஐத் தவிர ஏனையவை ரூ. 2 நாணயக் குற்றிகளாகும். 12ஐத் தவிர ஏனையவை ரூ. 5 நாணயக் குற்றிகளாகும். 13ஐத் தவிர ஏனையவை ரூ. 10 நாணயக் குற்றிகளாகும். உண்டியலில் உள்ள நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி யாது ?

1) ரூ. 94 **2)** ரூ. 130 **3)** ரூ. 150


12) காலை 9.30 ஆகும்போது ஓர் அலுவலகத்தில் ஐந்து வெளியாட்கள் இருந்தனர். இவ்வேளையில் இருந்து ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒரு தடவை இருவர் வீதம் அந்த அலுவலகத்திற்கு வருகின்றனர். ஒவ்வோர் ஐந்து நிமிடத்திற்கும் ஒரு தடவை ஐவர் வெளியேறுகின்றனர். மு.ப 9.42 இற்குப் பின்னர் அலுவலகத்தில் இருக்கும் வெளியாட்களின் எண்ணிக்கை யாது ?

1) 14 **2)** 17 **3)** 19

13) ஒரு கடிகாரம் 1.00, 2.00, 3.00 ..... என்றவாறு நேரத்தைக் காட்டும் போது முறையே ஒரு தடவை இரண்டு தடவைகள், மூன்று தடவைகள் ..... என்றவாறு ஒலிக்கின்றது. அது இடையிடையே 30ஆம் நிமிடத்தில் ஒரு தடவை வீதமும் ஒலிக்கின்றது. சனிக்கிழமை கதலையில் மோகன் படித்துக்கொண்டு இருந்தபோது கடிகாரம் 24 தடவை ஒலித்தமை அவனுக்குக் கேட்டது. அவன் மு.ப. 11.45 இற்குப் படித்து முடித்தான் எனின், படிக்கத் தொடங்கிய நேரம் யாதாக இருக்கலாம் ?

1) மு.ப. 9.15 **2)** மு.ப. 9.45 **3)** மு.ப. 10.15

■ கீழே தரப்பட்டுள்ள உருவில் மேற்பக்க முகத்திற்கு நீலநிற மையும் முன்பக்கத் தோற்றத்திற்கு சிவப்புநிற மையும் பக்கத்தோற்றத்திற்கு பச்சைநிற மையும் என்ற அடிப்படையில் அதன் எதிர் முகங்களுக்கும் அதே நிற மை பூசப்பட்டுள்ளன. அதனை முறிந்த கோடுகள் வழியே வெட்டி பல சிறிய மரக்குற்றிகள் பெறப்பட்டன. அதனைக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.



14) அருகில் தரப்பட்டுள்ள உருவில் உள்ள சிறிய மரக்குற்றிகளின் எண்ணிக்கை யாது ?

1) 18 *2) 24* *3) 27*

15) இரு நிறங்கள் மை படக்கூடிய மரக்குற்றிகள் எத்தனை ?

1) 12 *2) 8* *3) 6*

16) மூன்று நிறங்கள் மை படக்கூடிய மரக்குற்றிகள் எத்தனை ?

1) 12 **2)** 8 **3)** 6

17) ஒரு நிறம் மட்டும் மைபடக்கூடிய மரக்குற்றி எத்தனை ?

1) 1 **2)** 8 **3)** 6

18)




இச்செவ்வக வடிவக் கம்பிச் சட்டத்தை விரிப்பதன் மூலம் அமையக்கூடிய சதுரவடிவக் கம்பிச் சட்டத்தின் ஒரு பக்க நீளம் யாது ?

1) 5cm **2)** 7cm **3)** 10cm

19) பின்வரும் நெய்யரியையும் அதில் செல்வதற்காகத் தரப்பட்டுள்ள குற்றிகளையும் பார்க்க.

நெய்யரி



குறிகள்

↑ திசையில் திரும்புக.

→ ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் தூரத்திற்கு முன்னோக்கிச் செல்க.

↱ இடப் பக்கமாகத் திரும்பி ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் தூரத்திற்கு முன்னோக்கிச் செல்க.

↳ வலப் பக்கமாகத் திரும்பி ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் தூரத்திற்கு முன்னோக்கிச் செல்க.

■ நிறுத்துக.

மேற்குறித்த குறிகளுக்கு ஏற்பப் பின்வருமாறு இடம் A இலிருந்து ஆரம்பித்து

↑ → → ↱ → ↳ → → ↳ → ■ **என்னும் குறிகளுக்கு ஏற்ப செல்லும்**

ஒருவர் முடிக்கும் இடம் யாது ?

1) B **2)** C **3)** D

20) மின்னொளிச் சைகை உள்ள ஒரு பாதசாரிக் கடக்குமிடத்தில் சிவப்பு நிறமும் பச்சை நிறமும் மாறிமாறி ஒளிர்கின்றன. சிவப்பு நிறம் 90 செக்கனுக்கும் பச்சை நிறம் 15 செக்கனுக்கும் ஒளிர்கின்றன. முதலில் சிவப்பு நிறம் ஒளிருமெனின், அவ்வேளையிலிருந்து 5 நிமிடத்தினுள் பச்சை நிறம் மொத்தமாக எத்தனை செக்கனுக்கு ஒளிரும் ?

1) 45 **2)** 30 **3)** 60


21) எல்லா விதங்களிலும் ஒன்றையொன்று ஒத்த 6 அப்பிள் பழங்களை இருபிள்ளைகளுக்கிடையே பங்கிட வேண்டியுள்ளது. ஒவ்வொரு பிள்ளைக்கும் கிடைக்கத்தக்க அப்பிள் பழங்களின் எண்ணிக்கை வேறுபடலாம். ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு அப்பிள் பழமேனும் கிடைக்குமாறு அந்த ஆறு அப்பிள் பழங்களும் பங்கிடப்படத்தக்க வேறுபட்ட எத்தனை விதங்கள் உள்ளன ?

1) *5* **2)** *6* **3)** *7*

22) 

இவ்வுருவில் $\frac{3}{4}$ பகுதியை நிழற்றுவதற்கு இன்னும் நிழற்றப்படவேண்டிய சிறிய முக்கோண வடிவங்களின் எண்ணிக்கை யாது ?


1) *4* **2)** *8* **3)** *9*

23) 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது ?

1) *27*
2) *16*
3) *20*

ஒரு எண்கோணிக்கு எட்டு சமமான குச்சிகளைப் பயன்படுத்தி செய்யப்பட்ட வடிவம் கீழே தரப்பட்டுள்ளது. அதனை வைத்து விடை தருக.



24) அதன்படி *10* எண்கோணிகளைச் செய்வதற்குத் தேவையான குச்சிகளின் எண்ணிக்கை யாது ?

1) 71 ***2) 76*** ***3) 70***

25) *176* குச்சிகளைப் பயன்படுத்தி எத்தனை எண்கோணிகளை உருவாக்கலாம் ?



1) 20 ***2) 24*** ***3) 25***


www.ikedu.lk

● ஒரு பாத்திரத்தில் 25 சிவப்புப் பந்துகளும் 17 மஞ்சள் பந்துகளும் 12 வெள்ளைப் பந்துகளும் உள்ளன. ஒரு தடவைக்கு 5 சிவப்புப் பந்துகள் வீதமும் 3 மஞ்சள் பந்துகள் வீதமும் 2 வெள்ளைப் பந்துகள் வீதமும் வெளியே பந்துகள் வெளியே எடுக்கப்படுகின்றன.

26. அவ்வாறு பந்துகள் வெளியே எடுக்கப்படத்தக்க தடவைகள் எத்தனை ?
1) 10 தடவைகள் 2) 8 தடவைகள் 3) 6 தடவைகள்

27. அவ்வாறு பந்துகள் வெளியே எடுக்கப்படத்தக்க தடவைகளின் எண்ணிக்கை முடிவடைந்த பின்பு பாத்திரத்தில் எஞ்சியிருக்கும் பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது ?
1) 6 2) 5 3) 4

28.  எனின்  ? ஆவதற்கு ? உள்ள இடத்திற்குப் பொரத்தமான உரு எது ?

1)  2)  3) 

29. ஒரு வட்ட ஓட்டப் பாதையின் உள் எல்லையின் நீளம் 200m ஆகும். ஒவ்வொரு 10m தூரத்திலும் ஒரு கொடி வீதம் முதலாவதாக சிவப்பு நிறக் கொடியும் இரண்டாவதாக ஒரு நீல நிறக் கொடியும் மூன்றாவதாக ஒரு வெள்ளை நிறக் கொடியும் என்றவாறு இம்மூன்று நிறங்களிலும் கொடிகள் நாட்டப்பட்டன. இவ்வொழுங்கு முறையில் குறித்து முடிக்கும்போது சமஎண்ணிக்கையில் உள்ள கொடிகளின் நிறங்கள் யாவை ?

1) சிவப்பு நிறமும் வெள்ளை நிறமும்
2) வெள்ளை நிறமும் நீல நிறமும்
3) சிவப்பு நிறமும் நீல நிறமும்

30. சூரியன் நன்றாக உதித்துள்ள ஒரு காலையில் ஒரு மாணவன் ஒரு சமதள நிலத்தில் வரையப்பட்டுள்ள ஒரு வட்ட ஓட்டப் பாதையில் முற்றாக இரு சுற்றுக்கள் நடக்கிறான். அப்போது அவனுடைய நிழல் அவனுடைய இடக்கைப் பக்கத்திலிருந்து வலக்கைப் பக்கத்திற்கு எத்தனை தடவை மாறும் ?

1) 2 2) 3 3) 4

31. அடித்தளம் சதுரமான ஒரு பெட்டியின் உள் ஓரங்கள் வழியே 16 பால்மாத் தகரப் பேணிகள் மூடி மேல்நோக்கி இருக்குமாறு ஒன்றையொன்று அடுத்து வைக்கப்பட்டுள்ளன. அப்பெட்டியின் நடுப்பகுதியில் அதிகபட்டசம் இன்னும் எத்தனை அத்தகைய பால்மாத் தகரப் பேணிகளை அவ்விதமாக அடுக்கி வைக்கலாம் ?

1) 12 2) 9 3) 8

32. பாத்திமாவின் தொப்பியின் நிறம் பற்றிச் சரியாகத் தீர்மானிப்பதற்குத் தேவைப்படும் இரு கூற்றுக்களும் யாவை ?

A. ஆமினாவின் தொப்பி பச்சை நிறமுள்ளது.
B. சாலிஹாவின் தொப்பி பாத்திமாவின் தொப்பியிலும் பார்க்க மென்னிறமுள்ளது.
C. சாலிஹாவின் தொப்பி ஆமினாவின் தொப்பியிலும் பார்க்க மென்னிறமுள்ளது.
D. ஆமினாவின் தொப்பியின் நிறம் பாத்திமாவின் தொப்பியின் நிறத்தை ஒத்தது.

1) A, D 2) B, C 3) B, D

www.ikeau.lk

33. நான்கு பிள்ளைகளின் வயதுகளின் கூட்டுத்தொகை 64 ஆகும். 3 வருடங்களுக்கு முன் இவர்கள் மூவர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 37 எனின் நான்காவது பிள்ளையின் தற்போதைய வயது யாது ?

1) 15 2) 18 3) 21


34. நான்கு பிள்ளைகளின் வயதுகளின் சராசரி 12 ஆகும். ஐந்து பிள்ளைகளின் வயதுகளின் சராசரி 12. ஆகும். அதன்படி, ஐந்தாவது பிள்ளையின் வயது எத்தனை ?

1) 15 2) 20 3) 12

35. ஐந்து வருடங்களுக்கு முன் 2 பிள்ளைகளின் வயதுகளின் கூட்டுத்தொகை 10 ஆகும். இன்னும் 5 வருடங்களின் பின்னர் இரண்டு பிள்ளைகளின் வயதுகளின் கூட்டுத்தொகை யாது ?

1) 20 2) 30 3) 25

36. கீழே ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் நாணயங்கள் மூன்று வீதம் உள்ள மூன்று குவியல்கள் தரப்பட்டுள்ளன.



ஒரு குவியலில் இருந்து ஒரு நாணயத்தையும் இன்னொரு குவியலில் இருந்து இரண்டு நாணயங்களையும் அடுத்த குவியலில் இருந்து மூன்று நாணயங்களையும் எடுத்து ஆக்கக்கூடிய ஆகக்குறைந்த தொகை எவ்வளவு ?

1) ரூபாய் 20 2) ரூபாய் 12 3) ரூபாய் 8

37. தரம் ஐந்து மாணவர்கள் அனைவரையும் ஆசிரியர் ஒரு வட்டவடிவில் அமரச்செய்தார். அவர்கள் அனைவரும் தனக்கு எதிரே இருக்கும் மாணவனின் இலக்கத்தைக் கூறி அழைக்க வேண்டும். 7ஆம் இலக்கத்தையுடைய உமர் தனக்கு எதிரே இருந்த ரவியின் இலக்கமான 25 எனக் கூறி அழைத்தான். அதன்படி, இவ்வட்ட வடிவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது ?


1) 30 2) 36 3) 24

38. ஒரு சாப்பாட்டுக்கடை மேசையில் வட்டவடிவத்தில் அமர்ந்திருந்த நண்பர்கள் அனைவரும் சமஅளவான பணத்தைச் செலுத்தி சாப்பிட்டனர். அங்கு வட்டவடிவத்தில் 7ஆவது நபருக்கு நேராக 15ஆவது நபர் அமர்ந்திருந்தார். அவர்கள் உணவுக்காக செலுத்திய மொத்தப்பணம் ரூ. 1600.00 ஆகும். அதன்படி, ஒருவர் செலுத்திய தொகை யாது ?

1) 100.00 2) 150.00 3) 200.00


39. மேற்கு நோக்கிச் செல்லும் பின்வரும் மோட்டார்க் காரின் ஒரு சில்லின் சுற்றளவு 2 மீற்றராகும். அம்மோட்டார் கார் இப்போது உள்ள இடத்திலிருந்து 10 மீற்றர் முன்னோக்கிச் சென்று அதன் பின்னர் 4 மீற்றர் பின்னோக்கிச் செற்று நிறுத்தப்பட்டது. இப்பயணத்தில் மோட்டர்க்காரின் பற்சில்லில் ↑ இடப்பட்டுள்ள தானம் நிலத்தைத் தொடும் தடவைகளின் எண்ணிக்கை யாது ?

1) 6
2) 7
3) 8




www.ikedu.lk

40. உரு *B*இல் உள்ள வடிவத்தின் எத்தனை வெவ்வேறு அமைவுகள் உரு *A*இல் உள்ளன?



உரு A




உரு B

1) 6


2) 4

3) 8

41. உரு *B*இல் உள்ள வடிவத்தின் எத்தனை வெவ்வேறு அமைவுகள் உரு *A*இல் உள்ளன?



உரு A




உரு B

1) 6

2) 4

3) 8



42. உருவில் *A* இல் இடப்பட்டுள்ள மூன்று சில்லுகளையும் கோல் *B*யைப் பயன்படுத்தி கோல் *C*இற்கு அதே ஒழுங்குமுறையில் இருக்கும் விதத்தில் பின்வரும் நிபந்தனை களுக்கு அமைய மாற்ற வேண்டும்.

ஒரு தடவையில் ஒரு சில்லு மட்டுமே அகற்றப்பட முடியும்.

எப்போதும் மேலே உள்ள சில்லே அகற்றப்பட முடியும்.

அகற்றப்பட்ட சில்லை கையில் வைத்திருக்காது கோலில் இருத்தல் வேண்டும்.

கோலில் சிறிய சில்லிற்கு மேலே பெரிய சில்லை இட முடியாது

இதற்கேற்ப மூன்று சில்லுகளையும் கோல் Cஇற்கு மாற்றுவதற்குச் செய்ய வேண்டிய மிகக் குறைந்தளவு மாற்றுதல்களின் எண்ணிக்கை எத்தனை ?

1) 11 *2) 7* *3) 3*

42. காண்டாமணி டாங்..... டாங்..... டாங்.... என ஒரே விதத்தில் ஒலி எழுப்பியது. மணியின் ஒலி ஒரு முறையில் மூன்று தடவை எழுப்பும் ஓசையைக் கேட்பதற்கு எடுக்கும் ஆகக்குறைந்த நேரம் 6 செக்கன்களாகும். அவ்வாறு அது ஒரு முறையில் ஏழு தடவைகள் எழுப்பும் ஓசையைக் கேட்பதற்கு எடுக்கும் ஆகக்குறைந்த நேரம் எவ்வளவு?

1) 14 செக்கன்கள் *2) 18 செக்கன்கள்* *3) 21 செக்கன்கள்*

43. *18m* உயரமுள்ள கம்பத்தில் ஏறும் தவளையொன்று ஒரு பாய்ச்சலில் *6m* பாயும் போது *4m* சறுக்கும். அதன்படி அத்தவளை முதன் முதலில் எத்தனையாவது பாய்ச்சலில் கம்பத்தின் உச்சியை அடையும் ?

1) 7 *2)* 8 *3)* 6

www.ikedu.lk

44. ஒரு தொட்டியின் கொள்ளளவு 20 லீற்றராகும். அண்ணன் ஒரு தடவைக்கு 6 லீற்றர் வீதம் இட்டு இத்தொட்டியில் நீரை நிரப்புகிறான். ஒவ்வொரு தடவைக்கும் பின்னர் அவருடைய தம்பி நான்கு லீற்றர் வீதம் அந்நீரை வெளியே எடுக்கிறான். அண்ணன் எத்தனை தடவை நீரை இட்ட பின்னர், முதன் முதலாகத் தொட்டி நிரம்பும் ?

1) 6 *2) 7* *3) 8*

45. அமலன், கமலன், சமன் ஆகிய மூன்று நண்பர்களதும் தங்கைகள் மூவரும் கீதா, ராணி, சீதா ஆவர். கீதாவுடன் அமலின் தங்கை அமர்ந்திருக்கிறார். கமலின் தங்கை கீதா அல்ல எனின் சமனின் தங்கை யார் ?

1) சீதா *2) கீதா* *3) ராணி*

46. வியாபாரி ஒருவர் மூன்று பென்சில்களை ஐம்பது ரூபாவிற்கு வாங்கி இரண்டு பென்சில்களை ஐம்பது ரூபாவிற்கு விற்றார். அவர் நாள் ஒன்றில் பென்சில்களை விற்றதனால் 500.00 ரூபா இலாபம் பெற்றிருந்தால் அன்று அவர் விற்ற பென்சில்களின் எண்ணிக்கை யாது ?

1) 25 *2) 50* *3) 60*

47. ஒரு நிரையில் சங்கருக்கும் முரளிக்கும் இடையே ஐந்து பிள்ளைகளும் முரளிக்கும் கண்ணனுக்கும் இடையே எட்டுப் பிள்ளைகளும் நிற்கின்றனர். சங்கருக்கும் கண்ணனுக்கும் இடையே நிற்கத்தக்க பிள்ளைகளின் எண்ணிக்கையாக அமையாதது

1) 14 ஆகும் *2) 13 ஆகும்* *3) 2 ஆகம்*


48. ஒரு பாதையில் பயணிக்கும் போது ரமணியின் வீட்டுக்குப் பின்னால் பத்மா, மீனா, நளினி ஆகிய நண்பர்களின் வீடுகளைக் காணலாம். அவர்கள் ஒவ்வொருவருடைய வீடுகளுக்கும் இடையிலான தூரம் கிலோமீற்றரில் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, ரமணியினதும் பத்மாவினதும் வீடுகளுக்கு இடையிலான தூரம் எத்தனை கிலோமீற்றர் ஆகும் ?

		நளினி
	பத்மா	4
மீனா	5	3
3	.....	2

ரமணி

1) 4 *2) 8* *3) 5*

49. அருகில் தரப்பட்டுள்ள உருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது ?



1) 10 *2) 15* *3) 18*

50. மூன்று பந்துகளில் ஒன்று வெள்ளை நிறமுள்ளது. ஒன்று சிவப்பு நிறமுள்ளது. ஒன்று பச்சை நிறமுள்ளது. கீதாவுக்கு வெள்ளை நிறப் பந்து கிடைக்காதவாறு இம்மூன்று பந்துகளையும் கீதா, சங்கீதா, வருணா ஆகியோருக்கிடையே பகிர்ந்து கொள்ளத்தக்க ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட விதங்கள் எத்தனை உள்ளன ?

1) 6 *2) 4* *3) 2*

www.ikedu.lk

புதிய கல்வியாண்டு

2025

zoom

76667-4945

LEARN EASY

E

KNOWLEDGE IS POWER



தமிழ் English

கணிதம் விஞ்ஞானம்

வரலாறு சிங்களம்

கணக்கீடு

தமிழ் இலக்கிய நயம்

English Literature

ICT


தரம் 6

தொடக்கம்

தரம் 11

வரை

- நகரங்களுக்கிடையிலான தூரத்தை அளவிடுவதற்கு கிலோமீற்றர் (km) அலகு பயன்படுத்தப் பட்டுள்ளது.



01. நீர் கொழும்பிலிருந்து சிலாபத்திற்கான தூரம் யாது : .....km

02. பலுகஸ்கமவிலிருந்து அநுராதபுரத்திற்கான தூரம் யாது ? : .....km

03. நொச்சியாகமவில் இருந்து அநுராதபுரம் வரையிலான தூரம் யாது ? : .....km

தம்புள்ளையிலிருந்து மாத்தளை, கண்டி, கேகாலை வழியாக இரத்தினபுரிக்கான தூரம் பின்வரும் அட்டவணையில் மஅஇல் தரப்பட்டுள்ளது.

			இரத்தினபுரி
		கேகாலை	145
	கண்டி	68	
மாத்தளை	45		
தம்புள்ள	59		

01. தம்புள்ளையிலிருந்து கேகாலை வரைக்கும் உள்ள தூரம் எத்தனை கிலோமீற்றர் ஆகும் ? =.....km


02. மாத்தளையிலிருந்து இரத்தினபுரி வரைக்கும் உள்ள தூரம் எத்தனை கிலோமீற்றர் ஆகும் ? =.....km

03. தம்புள்ளையில் இருந்து கண்டி ஊடாக இரத்தினபுரிக்கான தூரம் யாது ?= .....km

04. எவ்விரு நகரங்களுக்கிடையில் உள்ள தூரம் 104km ஆகும் ? = ...

01. கல்முனையிலிருந்து அம்பாரை வரையான தூரம் யாது ?

இருந்து	வரைக்கும்	தூரம்
மட்டக்களப்பு	கல்முனை	76 km
மட்டக்களப்பு	அக்கரைப்பற்று	142 km
அக்கரைப்பற்று	அம்பாரை	72 km
கல்முனை	அம்பாரை	..... km



www.lkedu.lk